## அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு

# “தடம் - தமிழ்நாட்டின் பொக்கிஷங்கள்” நினைவுப் பரிசு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி பெருமிதம்!

சான்பிரான்சிஸ்கோ, செப்.1–

அமெரிக்காவில் முதலீட்டாளர்களுக்கு பரிசளித்தது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப்பதிவு வருமாறு:–

**நமது உள்ளூர்க் கைவினைக் கலைஞர்களுக்கு ஊக்கமளிப்பதற்காக ‘ஸ்டார்ட்–அப் தமிழ்நாடு’–இன் ‘தடம்’ எனும் முக்கிய முன்னெடுப்பை அறிமுகம் செய்தபோது, அமெரிக்காவில் நான் சந்தித்த முதலீட்டாளர் களுக்குத் “தடம் - தமிழ்நாட்டின் பொக்கிஷங்கள்” எனும் பெட்டியினை நினைவுப் பரிசாக வழங்கியதில் பெருமையடைகிறேன்.**



**மரபை நவீனத்துடன் இணைப்பதன் வழியாக, நமது திறன்மிகு கைவினைக் கலைஞர்களுக்கு உலகளாவிய இயங்குதளத்தையும் வாய்ப்புகளையும் வழங்கி, நமது பண்பாட்டு மரபு பாதுகாக்கப் படுவதையும் வளர்ச்சிபெறுவதையும் ‘தடம்’ உறுதிசெய்யும்.**

**நமது பண்பாட்டுப் பெருமையைக் கொண்டாவோம்; முன்னேற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போர்

# அரசின் விருது பெற விண்ணப்பிக்கலாம்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, செப்.1–

சென்னை மாவட்டத்தில் வீடுகளில் நூலகம் வைத்திருப்போருக்கு விருது பெற விண்ணப்பிக்கலாம் என அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது வருமாறு:–

தமிழக அரசு, வீடுதோறும் நூலகங்கள் அமைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு, மாவட்டம் தோறும் புத்தகத் திருவிழாக்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடு தோறும் நூலகங்கள் அமைத்து பயன்படுத்தி வரும் தீவிர வாசகர்களை ஊக்குவிக்கும் பொருட்டு விருது வழங்கப்படும் என அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளதால், சென்னை மாவட்டத்தில் வீடுதோறும் நூலகங்கள் அமைத்துச் சிறப்பாகப் பயன்படுத்தி வரும் தனிநபருக்கு மாவட்டங்களில் நடத்தப்படும் புத்தக கண்காட்சியில் சொந்த நூலகங்களுக்கு விருது, ரூ.3,000 மதிப்பில் கேடயம் மற்றும் சான்றிதழ் மாவட்ட ஆட்சியர் தலைவர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இந்த விருதுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர், தங்களது வீட்டில் உள்ள நூலகத்தில் எத்தனை நூல்கள் உள்ளன, எந்த வகையான நூல்கள் மற்றும் அரிய நூல்கள் விவரம் என்பன உள்ளிட்ட விவரங்களுடன், பெயர், முகவரி, செல்போன் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு dlochennai1@gmail.com என்ற இமெயில் முகவரிக்கும், கீழ்க்காணும் மாவட்ட நூலக அலுவலக முகவரிக்கும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட நூலக அலுவலரால் தெரிவிக்கப் படுகிறது.

இவ்வாறு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## திராவிட மாடல் அரசின் திட்டங்கள்–சாதனைகளை

# பட்டிதொட்டி எங்கும் கொண்டு செல்லுங்கள்!

## கடலூர் கழக முன்னோடி கே.ஜி.எஸ். இல்லத் திருமண விழாவில் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**புதுச்சேரி, செப்.01–**

**புதுச்சேரி, பட்டானூர் சங்கமித்ரா கன்வென்சன் ஹாலில், கடலூர் மாவட்டக் கழக முன்னோடி கே.ஜி.எஸ். இல்லத் திருமண விழா நேற்று முன்தினம் நடைபெற்றது, விழாவுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று, மணமக்கள் கே.ஜி.எஸ்.டி.சரத், நிவேதிதா ஆகியோரின் திருமண நிகழ்ச்சியை நடத்தி வைத்தார்.**

அப்போது அவர் பேசியதாவது

“இன்று கடலூர் மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர், கடலூர் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் சரத் – நிவேதிதா இணையரின் திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மணமகன் தம்பி சரத் அவர்கள் இளைஞர் அணியைச் சேர்ந்தவர். அவரின் தந்தையாரும் இளைஞர் அணியில் கழகப்பணி ஆற்றியவர் தான். அதனால்தான் இந்தத் திருமண விழா, இன்றைக்கு ஒரு கழக நிகழ்ச்சி போல எழுச்சியுடன் சிறப்பாக நடந்து கொண்டிருக்கிறது.

தம்பி சரத் அவர்கள் திராவிட இயக்கத்தின் பாரம்பரியமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். குடந்தை பெரியார், கழகத்தின் முதல் பொருளாளர் மறைந்த பெரியவர் கே.கே.நீலமேகம் அவர்களின் கொள்ளுப் பேரன்தான் சரத். நம் ஆசிரியர் அய்யா வீரமணி அவர்களுக்கும் நெருங்கிய உறவினர். பெரியவர் கே.கே.நீலமேகம் அவர்களைப் பொறுத்தவரை நீதிக் கட்சியில் பணியாற்றியவர்.

### மாநாட்டின் திறப்பாளர்

திராவிடர் கழகத்தின் நிர்வாகக் கமிட்டித் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர். பேரறிஞர் அண்ணா அவர்கள் கழகத்தைத் தொடங்கியபோது கழகத்தில் அண்ணாவைவிட வயதில் மூத்தவராக இருந்தவர்தான் கே.கே.என் அவர்கள். கழகத்தின் முதல் மாநில மாநாட்டின் திறப்பாளர். ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் செயலாளராக சிறப்பான முறையில் பணியாற்றியவர். 1950–களில் இந்தித் திணிப்பிற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தமிழ்நாடு முழுவதும் கருப்புக் கொடி காட்டும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

தஞ்சையில், ராஜாஜி அவர்களுக்கு எதிராக அப்படியொரு போராட்டத்தை நடத்தவேண்டும் என்று அண்ணா அவர்களிடம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார். அப்பொழுது அண்ணா சொன்ன முதல் வார்த்தை. “முதலில், நீ மாவட்டச் செயலாளர் கே.கே.நீலமேகத்திடம் ஒரு வார்த்தை சொல்லி, அனுமதி வாங்கி வந்துவிடு” என்று சொன்னார்கள்.

### ‘நெஞ்சுக்கு நீதி’

அந்த அளவிற்கு தஞ்சையில் கழகத்தைக் கட்டுப்பாட்டோடு நடத்தியவர்தான் கே.கே.நீலமேகம் அவர்கள். இந்தச் சம்பவங்களையெல்லாம் நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தன் `நெஞ்சுக்கு நீதி’ புத்தகத்தில் பதிவு செய்திருக்கிறார். கே.கே.என் அவர்கள் குடும்பத்தில் தம்பி சரத் அவர்களின் தாத்தா கே.ஜி.சாமிநாதன் அவர்களும் கழகப் பணியாற்றியவர்தான். கடலூர் நகரச் செயலாளராகவும், கடலூர் நகர்மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர். கே.கே.என் குடும்பத்தைச் சேர்ந்த தம்பி சரத் அவர்களின் திருமணத்தை நடத்தி வைப்பதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### மாநகர துணை அமைப்பாளர்

தன் கொள்ளுத் தாத்தா, தாத்தா, தந்தையாரைப் போலவே தம்பி சரத் அவர்களும் இன்று கழகத்திற்காக இளைஞர் அணியில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். மிகவும் பொறுமையானவர். எல்லோரிடமும் அன்பாகப் பழகக்கூடியவர். இந்தக் காரணத்தினால்தான் 23 வயதிலேயே





அவரைக் கடலூர் மக்கள், மாநகராட்சி கவுன்சிலராக வெற்றிபெற வைத்துள்ளனர்.

அவர் இன்றைக்கு, இளைஞர் அணியின் மாநகரத் துணை அமைப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இன்றைக்கு இந்தத் திருமண விழாவிற்கு நிறைய தாய்மார்கள், மகளிர் வந்திருக்கிறீர்கள். ஒரு காலத்தில் மகளிர் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே அனுமதி கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. இன்னும் சொல்லப்போனால் ஆண்களுக்குச் சமமாக பெண்களும் வந்து உட்கார்ந்து இருக்கிறீர்கள்.

### சொத்தில் சம உரிமை

மகளிருக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை என்று இந்தியாவிலேயே முதன்முறையாகச் சட்டம் கொண்டு வந்தவர், நம் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். இன்று நம் முதலமைச்சர் அவர்கள் மகளிரின் நலனுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். ஆட்சிப் பொறுப்பேற்றதும், முதல் கையெழுத்தாக மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டத்தில் நம் முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டார்கள்.

இன்றைக்கு மகளிர் வெளிநாட்டிற்குச் சென்றும் படிக்கிறார்கள். ஆண்களைவிட அதிகமாகப் பெண்கள் படிக்கிறார்கள். இந்த மாற்றத்தைக் கொண்டு வந்தது. நம் திராவிட இயக்கம். நம் திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்த திட்டத்தினால், இன்று மகளிர் இந்த மூன்று வருடங்களில் மட்டும் கிட்டத்தட்ட 520 கோடி முறை விடியல் பயணங்களை மேற்கொண்டுள்ளார்கள். ஒவ்வொரு மகளிரும் சராசரியாக மாதம் ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்வியில் சேர்கின்ற மாணவிகளுக்குப் `புதுமைப்பெண்’ திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்குகிறது நம் திராவிட மாடல் அரசு. இதனால், உயர்கல்வியில் சேர்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

### காலை உணவுத் திட்டம்

`தமிழ்ப்புதல்வன் என்ற திட்டத்தின் மூலம் அரசுப் பள்ளியில் படித்த மாணவர்கள் உயர் கல்வி படிப்பதற்காக ஆகஸ்ட் மாதத்தில் இருந்து மாதம் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறார் நம் முதலமைச்சர் அவர்கள்.

மகளிர் காலையில் எழுந்து சமைத்துக் கொடுத்து பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புவது எவ்வளவு சிரமம் என்று உங்களுக்குத் தெரியும். அதற்காக நம் தலைவர் அவர்கள் கொண்டுவந்த திட்டம்தான் `முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’. 20 லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் தினமும் இந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகிறார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம் மூலம் ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறுகிறார்கள். கடந்த ஆண்டு செப்டம்பர் தொடங்கிய திட்டம், இந்த ஆண்டு செப்டம்பர் முதல் இது வரை இந்த 12 மாதங்களுக்கு ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் 12 ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகையாக வாங்கியிருக்கிறார்கள் என்பது பெருமைப் படக்கூடிய விஷயம்.

### நான் முதல்வன் திட்டம்

இப்படிப் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் மகளிரின் மேம்பாட்டிற்காக நடத்தி வருகிறார்கள். இன்றைக்கு `நான் முதல்வன்’ போன்ற திட்டங்களால் 30 லட்சம் மாணவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள்.

அரசுப் பள்ளியில் படித்து வெளிநாட்டிற்கு உயர் கல்வி பயில செல்லக்கூடிய மாணவர்களின் முதல் பயணச் செலவையும் தமிழக அரசே ஏற்கும் என்ற சிறப்பான அறிவிப்பை நம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இன்று இந்தியாவிலேயே பணிக்குச் செல்கின்ற பெண்களில் 42 சதவிகிதம் பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதையும் இங்கு பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எனவே, இங்கு வந்திருக்கின்ற நீங்கள் ஒவ்வொருவரும் அரசின் சாதனைகளை பட்டிதொட்டியெங்கும் கொண்டு செல்கின்ற அரசின் தூதுவர்களாக, அம்பாசிடர்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மணமக்கள் இருவரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழவேண்டும்.

ஒருவரையொருவர் சுயமரியாதையுடன் நடத்த வேண்டும். உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு அழகான தமிழ்ப்பெயர் வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு மணமக்கள் இருவரும் பெரியாரும் பகுத்தறிவும் போல, பேரறிஞர் அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல, கலைஞரும் திராவிட முன்னேற்றக் கழகமும் போல, கழகத் தலைவரும் தமிழ்நாட்டு மக்களும் போல பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன், அமைச்சர்கள் க.பொன்முடி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சி.வெ.கணேசன், புதுச்சேரி சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் சிவா, மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் மருத்துவர் கௌதம் சிகாமணி, மருத்துவர் சேகர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சபா ராஜேந்திரன், ஐயப்பன், சிந்தனைச்செல்வன், புதுச்சேரி மாநில முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.சிவக்குமார், சுப.சந்திரசேகர், கடலூர் மாநகரச் செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர் கிழக்கு மாவட்டப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் அப்துல்மாலிக், பிரபு கஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கார்த்திகேயன், ஆனந்த், தினகரன், எம்.எஸ்.கணேஷ்குமார், புதுச்சேரி மாநில இளைஞர் அணி அமைப்பாளர் சம்பத், கடலூர் மாநகர அமைப்பாளர் ஜெகன் உள்பட கழக முன்னணியினர், இளைஞர் அணிச் செயல் வீரர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.8.2024) சென்னையில் நடைபெறும் ஃபார்முலா ஸ்ட்ரீட் சர்க்யூட் போட்டிக்கான இறுதிக் கட்ட முன்னேற்பாட்டுப் பணிகளை நேரில் பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.